வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

# புகுநிலை வகுப்பு

# மாதிரி வினாக்கள்

Quiz Sample Questions 2019 - Preparatory Class

1. ஒற்றுமை என்ற சொல்லுக்குரிய எதிர்க் கருத்துள்ள சொல் எது?

1. அன்பு

2. வேற்றுமை

3. நேசம்

**விடை:**

**2. வேற்றுமை**

2. அது என்ற ஒருமைச் சொல்லின் பன்மை வடிவம் எது?

**விடை:**

# அவை (அவைகள்)

3. கப்பல் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்?

**விடை:**

# மாலுமி

# (மீகான்)

4. கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படும் கவிஞர் யார்?

1. கபிலர்
2. பாரதியார்
3. கம்பர்

**<u>விடை:</u>**

3. கம்பர்

5. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் இருக்கின்றன?

**விடை:**

# 12 மாதங்கள்

6. மதித்தல் என்ற சொல்லின்

எதிர்க் கருத்துச் சொல் எது?

1. மிதித்தல்
2. கழித்தல்
3. அவமதித்தல்

**<u>விடை:</u>**

# 3. அவமதித்தல்

7. வானவில்லில் உள்ள

நிறங்களில் இரண்டைக் கூறுக?

**விடை:**

ஊதா, கருநீலம்

(நீலம், பச்சை, மஞ்சள்,

செம்மஞ்சள், சிவப்பு)

# 8. இது என்ன?



**<u>விடை:</u>**

**மேளம்**

**(தவில்)**

**9.** கிளி பறந்தது.

கிளியும் காகமும் ________________

**விடை:**

பறந்தன

10. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றைக் கூறுக?

**<u>விடை:</u>**

**சிலப்பதிகாரம்**

**(மணிமேகலை,**

**வளையாபதி,**

**குண்டலகேசி,**

**சீவகசிந்தாமணி)**

11. மிளகாய் உறைக்கும் என்பதுபோல

வாழைப்பழத்தின் சுவை என்ன?

**<u>விடை:</u>**

# இனிப்பு

12. பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகின்றது. அது எது?

1. வேட்டி
2. சேலை
3. பாவாடை
4. மணிக்கூடு

**<u>விடை:</u>**

# 4. மணிக்கூடு

13. சூரியன் எந்தத் திசையில் உதிக்கும்?

**<u>விடை:</u>**

**கிழக்குத் திசை**

14. இடைவெளியை நிரப்புக:

நோயற்ற வாழ்வே ..................... ........................

**<u>விடை:</u>**

# குறைவற்ற செல்வம்

15. நான் முக்கனிகளில் ஒருவன்.

எனது தோல் முள்ளு முள்ளாக இருக்கும்.

நான் யார்?

**விடை:**

# பலாப் பழம்

16. ஒருவர் தனது வரலாற்றைத் தானாக எழுதுவதை எப்படி அழைப்பர்?

**விடை:**

**சுயசரிதை**

17. வாய்மைக்கு இலக்கணமாகப்

போற்றப்படும் மன்னன் யார்?

**<u>விடை:</u>**

## அரிச்சந்திரன்

18. பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் …………… …………………

**<u>விடை:</u>**

# இகழ்ச்சி அடையார்

## 19. இது என்ன?



**<u>விடை:</u>**

# வீணை

20. சந்திரன் என்பதற்கு ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக?

**விடை:**

**நிலா**

**(திங்கள் / மதி / திங்கள் / அம்புலி / சந்திரன் ......)**

21. இன்று சனிக்கிழமை

நாளை என்ன கிழமை?

**<u>விடை:</u>**

# ஞாயிற்றுக் கிழமை (ஞாயிறு)

22. அம்மாவின் அக்காவை

நீங்கள் எப்படி அழைப்பீர்கள்?

**விடை:**

# பெரியம்மா

23. அவன் நேற்றுக் கடைக்கு .........

1. சென்றான்

2. செல்வான்

3. செல்கிறான்

**<u>விடை:</u>**

1. **சென்றான்**

24. அம்மாவின் அக்காவை

நீங்கள் எப்படி அழைப்பீர்கள்?

**<u>விடை:</u>**

# பெரியம்மா

25. நாய் குரைப்பது போல காகம்

**<u>விடை:</u>**

**கரையும்**